

# பாரதியை கன்னடத்துக்கும் குவெம்புவை தமிழுக்கும் கொண்டுசெல்வோம்

## கன்னட பேராசிரியர் வீரபத்ரப்பா பேச்சு

பெங்களூர்,டிச.19-

தமிழ் கவிஞர் பாரதியாரையும், கன்னட கவிஞர் குவெம்புவை தமிழுக்கும் கொண்டு சென்று பரப்ப வேண்டும் என கன்னட பேராசிரியர் வீரபத்ரப்பா பேசினார்.

தமிழகத்தைச் சேர்ந்த உரத்த சிந்தனை வாசக எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பில் ஏழாவது ஆண்டு பாரதி உலா நிகழ்ச்சி பெங்களூரு அல்சூரில் உள்ள ஆர்பிஏஎன்எம்எஸ் முதல் நிலைக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்றது. கல்லூரியின் நிர்வாக அதிகாரியும் கன்னட பேராசிரியருமான வீரபத்ரப்பா தலைமையில் நடந்த இவ்விழாவில் கல்லூரியின் தாளாளர் பிரதாப், உரத்த சிந்தனை சங்கத்தின் செயலாளார் உதயம்ராம், பேராசிரியர் ரவீந்திரா, புலவர் கார்த்தியாயினி, பத்திரிகையாளர்கள் முத்துமணி, இரா.வினோத், சமூக ஆர்வலர்கள் வி.எஸ்.சேவியர் பெட்டிட், எஸ்.வி.ஆர்.மூர்த்தி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

பாரதியாரின் படைப்புகள் தொடர்பான பேச்சு, கவிதை, பாட்டரங்க போட்டிகளில் 21 மாணவ மாணவிகள் பங்கேற்று திறமை வெளிப்படுத்தினர். சிறப்பான முறையில் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு உரத்த சிந்தனை சங்கத்தின் செயலாளர் உதயம் ராம் பரிசும் சான்றிதழும் வழங்கினார்.

ஆர்பிஏஎன்எம்எஸ் முதல் நிலைக் கல்லூரியின் நிர்வாக அதிகாரியும் கன்னட பேராசிரியருமான வீரபத்ரப்பா பேசுகையில், " பாரதியார் தமிழ் இலக்கியத்தை பாமரர்களுக்கு புரியும் வகையில் எழுதினார். அவரது கவிதைகள் படிக்காத மக்களுக்கும் எளிதில் புரிந்தது. தமிழ் மொழி நடையை மிக எளிமையாகவும் அழகாகாவும் மாற்றினார். தமிழில் புதுகவிதை பாணிக்கு அவர் தொடக்கமாக இருந்தார். பாரதியாரின் கவிதைகளில் இயற்கை, காதல், சமூக பிரச்சினை, மூட நம்பிக்கை, மனித நேயம் குறித்து ஏராளமான கவிதைகளை எழுதியுள்ளார்.

பாரதியாரை படிக்கும் போது எனக்கு கன்னட கவிஞர் குவெம்புவின் கவிதைகள் நினைவுக்கு வந்தன. கன்னடத்தில் புதுகவிதை வடிவத்தை தொடங்கி வைத்தவர் குவெம்பு. அவரும் இயற்கை, காதல், சமூக பிரச்சினை, மூட நம்பிக்கை, மனித நேயம் குறித்து நிறைய கவிதைகளை படைத்திருக்கிறார். சில கவிதைகளில் பாரதியாரும் குவெம்புவும் ஒரே கருத்தை பிரதிபலித்திருக்கிறார்கள்.

பாரதியாரும் குவெம்புவும் சமகாலத்தை சேர்ந்தவர்கள் இல்லை. பாரதி மறைந்த பிறகே குவெம்பு இலக்கிய உலகிற்குள் நுழைகிறார். இருப்பினும் அவரது கருத்தை குவெம்பு பல இடங்களில் எதிரொலித்திருக்கிறார். எனவே தமிழ் கவிஞர் பாரதியாரின் படைப்புகளை கன்னட மொழியிலும், கன்னட கவிஞர் குவெம்புவின் படைப்புகளை தமிழிலும் மொழிப்பெயர்க்க வேண்டும். இருவரின் சிந்தனைகளையும் மக்களிடம் கொண்டு சென்று பரப்ப வேண்டும்"என்றார்.

இவ்விழாவை ஒருங்கிணைத்திருந்த தமிழ்த்துறைப் பேராசிரியை சிவப்ரியா நன்றியுரை நிகழ்த்தினார்.

வரவேற்புரை — திருமதி **சிவப்ரியா கண்ணன்** M.A., M.Ed., தமிழ்பேராசிரியை

தலைமை — டாக்டர் **H. வீரபத்ரப்பா** M.A., M.Phil., Ph.D.,
நிர்வாக அதிகாரி, RBANM's First Grade College

தொடக்கவுரை — டாக்டர் **P. பிரதாப்** M.Com., M.Phil., Ph.D.,
முதல்வர், RBANM's First Grade College

## கவிதைப் போட்டி

**ர.செல்வம்** III - B.A. (Humanity) — **ப.சந்துரு** II - BBA
**கு.ஶ்ரீனிவாசன்** II - BBA — **நா.நந்தினி** II - B.Com
**பி.பிரேமா** I - B.com — **ரா.அரவிந்தன்** I - BCA

## பாடலரங்கம்

**ரா.பிரித்தி** III - B.A. (Humanity) — **ம.ஆனந்த்** II - B.com
**செ.உஷா** I - B.com — **மு.ஆனந்தன்** I - BCA
**ஆ.த.நிவேதா** I - BCA — **கி.சிவசங்கரி** I - BCA

## பார் போற்றும் பாரதி – பேச்சரங்கம்

**மு.குமார்** III - B.A. (Humanity) — **ரா.பிரித்தி** III - B.A. (Humanity)
**ம.மௌனிகா** II - BCA — **ரா.பிரியா** I - B.com
**பா.பூங்காவனம்** I - B.com — **ரா.சௌம்யா** I - B.com

## பாரதியார் வேடம்

**கு.தீனதயாளன்** I - BCA — **சி.ஜீசஸ் டோனி ரேமாண்ட்** I - BCA

**வரைதல் – K.ஜெய்கிரண்** I - BCA

வாழ்த்துரை — பேராசிரியர் **K. ரவீந்திரா**
துணை முதல்வர், RBANM's First Grade College

புலவர் **மா.கார்த்தியாயினி**
செயலாளர், கருநாடக தமிழ்ப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர் சங்கம்

'தினமணி நிபுணர்' திரு **முத்துமணி நன்னன்**
செயலாளர், கருநாடக தமிழ்ப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர் சங்கம்

சித்தாந்த ரத்தினம் திரு **எஸ்.வி.ஆர்.மூர்த்தி** பெங்களூரு

திரு **வி.எஸ்.சேவியர் பெட்டிட்** (Freelance Consultant)

மாணவர்களுக்குப் பரிசளித்து சிறப்புரை:

**திரு உதயம்ராம்** பொதுச்செயலாளர், உரத்தசிந்தனை சங்கம்

---

உரத்தசிந்தனை
வாசக எழுத்தாளர்கள் சங்கம்

நம் உரத்தசிந்தனை
தமிழ் மாத இதழ்

இணைந்து பயணிக்கும்

ஏழாவது ஆண்டில்

# பாரதி உலா 2021

பாரதி உலா 2021

**நேரிலும் | இணைய வழியிலும்**
**30-11-2021 முதல் 09-01-2022 வரை**

எண்ணிய முடிதல் வேண்டும் — நல்லவே எண்ணல் வேண்டும்

## நிகழ்ச்சி 10

நாள்: **18.12.2021**
சனிக்கிழமை, காலை 10.00 மணி

CONJUNCTIS VIRIBUS

**RBANM's First Grade College**
12, Annaswamy Mudaliar Rd, Ulsoor, Bengaluru - 560 042.

அன்புடன் அழைக்கும்

| | | |
|---|---|---|
| **பத்மினி பட்டாபிராமன்** | **துளசி பட்** | **உதயம்ராம்** |
| தலைவர் | தலைவர், பெங்களூரு கிளை | பொதுச்செயலாளர் |

சிந்தனையைச் செயலாக்கியோர்

Auditor N R K — TECHKNOW — TAPAMS Group of Companies — மணிவாசகர் பதிப்பகம் — Chennai Sai Group of Matrimonials 98403 30531 Founder Dr. N.PANCHAPAKESAN


2021


பாரதி
2021
நேரிலும்
30-11-2021
வேண்டும்
First
Bisleri


உலா 2021


பாரதி உலா 2021
இணைய வழியிலும்
30-11-2021
09-01-2022



நிகழ்ச்சி–10
பெங்களூரு

# பாரதி உலா

## RBANM's First Grade College
### பெங்களூரு




உரத்தசிந்தனை 'பாரதி உலா'வின் பத்தாவது நிகழ்ச்சி பெங்களூரு அல்சூரிலுள்ள RBANM's First Grade கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரியின் நிர்வாக அதிகாரி டாக்டர் வீரபத்ரப்பா தலைமையில், முதல்வர் டாக்டர் பிரதாப் தொடக்கவுரையாற்றினார்.





துணை முதல்வர் பேராசிரியர் கே.ரவீந்திரா, கர்நாடக தமிழ்ப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் புலவர் மா.கார்த்தியாயினி, கர்நாடக தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. முத்துமணிநன்னன், 'சித்தாந்த ரத்தினம்'எஸ்.வி.ஆர்.மூர்த்தி, திரு. சேவியர் பெட்டிட் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்ப் பேராசிரியை சிவப்பிரியா வரவேற்புரை வழங்க, உதயம்ராம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.



டாக்டர் எச்.வீரபத்ரப்பா அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

